# நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் தடுப்பூசி சேவைகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்புகள்

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தில் உள்ள மருத்துவம், பல் மருத்துவம், ஆயுர்வேதம், யோகா & இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, ஓமியோபதி, செவிலியியல், மருந்தியல், இயன்முறை மருத்துவம் மற்றும் பிற மருத்துவம் சார்ந்த படிப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவ ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் குறுகிய கால மாணவர் திட்டத்தை செயல்படுத்த உதவித் தொகையாக ஆண்டிற்கு ரூ.1 கோடி வழங்கப்படும்.

**80.மலைவாழ் பகுதியில் காணப்படும் சிக்கிள் செல் மற்றும் தலசீமியா நோய்களைக் கண்டறிய ஏழு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு HPLC கருவிகள் வழங்கப்படும்**

மலைவாழ் பகுதியில் அதிக அளவில் காணப்படும் சிக்கிள் செல் மற்றும் தலசீமியா நோய்களைக் கண்டறியும் High Performance Liquid Chromatography (HPLC) கருவிகள் நீலகிரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், கள்ளக்குறிச்சி, ஈரோடு, திருவண்ணாமலை, திண்டுக்கல் ஆகிய ஏழு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும்.

### ஒருங்கிணைந்த உணர்வுத்திறன் பூங்காக்கள்

**81.ஆறு மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்களில் (DEIC) "ஒருங்கிணைந்த உணர்வுத்திறன் பூங்காக்கள்" அமைக்கப்படும்**

கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், திருப்பூர், சென்னை-எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, ஈரோடு, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள தொடக்கநிலை இடையீட்டு மையங்களில் (DEIC) "ஒருங்கிணைந்த உணர்வுத்திறன் பூங்காக்கள்" (Sensory Integration Park) அமைக்கப்படும்.

**82.சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் இரத்தச் சுத்திகரிப்பு (Hemodialysis) சேவைகளுக்கான மின்னணு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும்**

சிறுநீரக சிகிச்சை மருத்துவத்தில் ஆரம்ப கால நிலையைக் கண்டறிதல், தரமான சிகிச்சை வழங்குதல், மண்டல சிறப்பு மையங்களில் சிறுநீரக சிகிச்சை நிபுணர்களைக் கொண்டு நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு சிகிச்சை வழங்குதல், தொலைத் தொடர்பு காணொளி வாயிலாக ஒருங்கிணைந்த சிகிச்சை வழங்குதல் மற்றும் நோயாளிகளின் மருத்துவச் செலவீனங்களைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாட்டில் இரத்தச் சுத்திகரிப்பிற்கான (Hemodialysis) ஹப் & ஸ்போக் மாதிரியில் நடைமுறைப்படுத்தப்படும்.

**83.பச்சிளம் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கிடைப்பதை உறுதிப்படுத்த ஆறு அரசு மருத்துவமனைகளில் பாலூட்டும் மேலாண்மை அலகு (LMU) நிறுவப்படும்**

உசிலம்பட்டி, பட்டுக்கோட்டை, திண்டிவனம், அருப்புக்கோட்டை, குடியாத்தம் ஆகிய 5 அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு கடலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகளுக்கான தாய்ப்பாலை சேகரித்து வைப்பதற்கும், தாய்ப்பால் தானத்தை மேம்படுத்துவதற்கும், பாலூட்டும் மேலாண்மை அலகு (Lactation Management Unit) நிறுவப்படும்.

**84.கிருஷ்ணகிரி மற்றும் திருவாரூர் மாவட்ட மக்களுக்கு கண் சிகிச்சை சேவைகளை நேரடியாக வழங்குவதற்கு நடமாடும் கண் மருத்துவ சேவை வாகனங்கள் வழங்கப்படும்**

ஒருங்கிணைந்த கண் சிகிச்சை மருத்துவ சேவைகளை கிருஷ்ணகிரி மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு நேரடியாக வழங்குவதற்கு, நடமாடும் கண் மருத்துவ சேவை வாகனங்கள் வழங்கப்படும்.

**85.நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக, ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் (IHIP-IDSP) சுகாதார நலப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்**

ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் வரும் டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா, உண்ணிக்காய்ச்சல் என்கிற ஸ்க்ரப் டைபஸ் (Scrub Typhus), எலிக்காய்ச்சல் என்கிற லெப்டோஸ்பைரோசிஸ் (Leptospirosis), வெறிநாய்க்கடி நோய், தட்டம்மை, தொண்டை அடைப்பான், பருவகால ஃப்:ளு காய்ச்சல், வயிற்றுப்போக்கு, காலரா, மஞ்சள்காமாலை (Hepatitis A&E), டைபாய்டு காய்ச்சல், காசநோய், தொழுநோய் உட்பட 40-க்கும் மேற்பட்ட தொற்று நோய்களுக்கான தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்படுத்துதல் குறித்து மருத்துவ அலுவலர்கள், சுகாதார பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

### பழங்குடி மக்களுக்கு பயன்தரும் மருத்துவம்

**86.புதிதாக 6 இடங்களில் இந்திய மருத்துவ முறை பழங்குடி நடமாடும் மருத்துவப் பிரிவுகள் தோற்றுவிக்கப்படும்**

இந்திய மருத்துவமுறை பழங்குடி நடமாடும் மருத்துவப் பிரிவுகள் புதிதாக அருநூத்துமலை, வெள்ளிமலை ஆகிய இடங்களில் ஆயுர்வேதா பிரிவுகளும், தாளவாடி, பளியங்குடி ஆகிய இடங்களில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ பிரிவுகளும், ஜவ்வாது மலையில் யுனானி பிரிவும் மற்றும் ஆனைக்கட்டியில் ஓமியோபதி பிரிவும் தோற்றுவிக்கப்படும்.

**87.காசநோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ், டிஜிட்டல் ஊடுகதிர் கருவியைக் கொண்டுள்ள நடமாடும் வாகனங்களில் "செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்" (AI-Technology) நிறுவப்படும்**

காசநோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ், காசநோயை விரைவாக, ஆரம்ப நிலையிலேயே துல்லியமாகக் கண்டறிய தற்போது, ஆறு நடமாடும் வாகனங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், இதனை மேம்படுத்தும் வகையில் கூடுதலாக ஆறு நடமாடும் வாகனங்களில், "செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்" (AI-Technology) நிறுவப்படும்.

**88.இருதயக் கோளாறு உள்ள கர்ப்பிணித் தாய்மார்களைக் கண்டறிந்து சிகிச்சை அளித்திட 5 ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களுக்கு எக்கோ (Echo) கருவிகள் வழங்கப்படும்**

இருதய நோயினால் ஏற்படும் மகப்பேறு இறப்புகளைத் தடுக்க, தாம்பரம், பொள்ளாச்சி, பரமக்குடி, குடியாத்தம், அருப்புக்கோட்டை ஆகிய 5 அரசு மருத்துவமனைகளில் உள்ள ஒருங்கிணைந்த அவசர கால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களுக்கு எக்கோ (Echo) கருவிகள் வழங்கப்படும்.

**89. எட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அதிநவீன மருத்துவ நோய் பரவியியல் பிரிவுகள் நிறுவப்படும்**

சென்னை-கீழ்ப்பாக்கம், தஞ்சாவூர், திருச்சி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 8 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அதிநவீன மருத்துவ நோய் பரவியியல் பிரிவுகள் (Clinical Epidemiology) நிறுவப்படும். இதன்மூலம் தொற்றுநோயியல் மற்றும் புள்ளிவிவர சேவைகள் மேம்படுத்தப்படும்.

## மருத்துவமனைகளில் மின்னணுத் தகவல் பலகைகள்!

**90.மயிலாடுதுறையில் மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையம் (District Early Intervention Centre) அமைக்கப்படும்**

மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் குழந்தைகளுக்கான மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையம் (District Early Intervention Centre) அமைக்கப்படும். இம்மையத்தில் குழந்தைகள் நல மருத்துவர், மருத்துவ அலுவலர் உட்பட மருத்துவம்/மருத்துவம் சாரா பணியாளர்கள் கொண்ட குழுவினால், 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும்.

**91.கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994 செயல் திட்டத்தை மேம்படுத்தும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்**

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய நான்கு மண்டலங்களில் கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994 செயல் திட்டத்தை மேம்படுத்தும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்.

### முழுமையான பல் பரிசோதனை பிரிவு

**92.சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முழுமையான பல் நல பரிசோதனை (Master Dental Health Check Up) பிரிவு தொடங்கப்படும்**

தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், முழுமையான பல் நல பரிசோதனை (Master Dental Health Check Up) பிரிவு தொடங்கப்படும். இது பற்கள், பல்தாங்கு பகுதிகள், தாடை மற்றும் பிற மென்திசுக்களின் பிரச்சினைகளைத் தவிர்க்கவும், சிகிச்சை அளிக்கவும் உதவும்.

## உணவுத் தரங்களைக் கண்டறிவதற்கான புதிய சமூக ஊடகப் பிரிவு!

**93.நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தமிழ்நாடு மருத்துவத்தர மேம்பாட்டுக் கட்டமைப்பு பயிற்சித் (TAN-QuEST) திட்டம் விரிவுபடுத்தப்படும்**

செங்கல்பட்டு, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 4 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தமிழ்நாடு மருத்துவத்தர மேம்பாட்டுக் கட்டமைப்பு பயிற்சித் (TAN-QuEST) திட்டம் விரிவுபடுத்தப்படும். இப்பயிற்சி முறை நோயாளிகளுக்கும் மருத்துவர்களுக்கும், சுகாதார பணியாளர்களுக்குமிடையே நல்ல புரிதல் மற்றும் தகவல் தொடர்பை உருவாக்க உதவும்.

**94.மலைவாழ் பகுதியில் சிக்கிள்செல் மற்றும் தலசீமியா மரபணு சாத்தியக்கூறு (Trait) மற்றும் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்க 14 மரபணு சார்ந்த ஆலோசகர்கள் நியமிக்கப்படுவர்**

தமிழ்நாட்டில் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் ஹீமோகுளோபினோபதீஸ் (Hemoglobinopathies) தடுப்புத் திட்டத்தின்கீழ் 3.03 இலட்சம் பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இதில், சிக்கிள் செல் மற்றும் தலசீமியா நோய் மரபணு சாத்தியக்கூறு (Trait) மற்றும் நோய் பாதிப்புடையவர்களுக்கு ஆலோசனை வழங்க 14 மரபணு சார்ந்த ஆலோசகர்கள் நியமிக்கப்படுவர்.

**95.மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் எதிர்கால தேவைக்கான மனிதவள மேலாண்மைத் தொலைநோக்குத் திட்டம் (Human Resources for Health Strategy) உருவாக்கப்படும்**

தற்கால அனுபவங்களின் அடிப்படையில் எதிர்காலத்திற்கான மருத்துவ சேவை பணியாளர்கள் மற்றும் கட்டமைப்பின் தேவைகளை முன் கூட்டியே மதிப்பீடு செய்வது தற்போதைய காலகட்டத்தின் அவசியமாகும்.

அதன் தொடக்கமாக, மருத்துவ சேவைப் பணியாளர்கள் மற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கை, கல்வித்தரம், திறன் மேம்பாடு பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வகைப்படுத்தப்படும்.

### சித்த மருந்தகத்திற்கு புதிய கட்டடம்

**96.திருச்சிராப்பள்ளி மாவட்டம், சோமரசம்பேட்டையில் இயங்கிவரும் சித்த மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சோமரசம்பேட்டையை சுற்றி உள்ள 20 கிராமங்களைச் சார்ந்த பொதுமக்கள் சித்த மருத்துவத்தின் பயன்களை பெறும் வகையில் சோமரசம்பேட்டையில் இயங்கிவரும் சித்த மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

**97.வளரிளம் பருவத்தினருக்கு ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் திறன் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்**

அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள் (Aided Schools) மற்றும் அனைத்து கல்லூரிகளில் பயிலும் வளரிளம் பருவத்தினருக்கு அவர்களுடைய ஆரோக்கியத்தை மேம்படுத்த இணையவழித் தளத்தின்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**98.நீடித்த நுரையீரல் அடைப்பு நோய்களுக்கான (COPD) விழிப்புணர்வு மற்றும் ஆரம்ப கட்ட பரிசோதனை மேற்கொள்ளப்படும்**

நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் (COPD) பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தவும், முதியவர்கள், நெடுங்காலம் புகைப்பிடிப்பவர்கள், நுரையீரல் தாக்கம் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ள நபர்களுக்கும் ஆரம்ப நிலையிலேயே நுரையீரல் அடைப்பு நோயை கண்டறிந்து நோய் தாக்கம் குறையவும் வழிவகை செய்யப்படும்.

### கல்லீரல் பாதுகாப்பும் சிகிச்சை முறைகளும்

**99.கொழுப்புமிகு ஈரல் நோய் (Metabolic Dysfunction associated Steatotic Liver Disease-Previously NAFLD) குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் ஆரம்ப நிலை பரிசோதனை மேற்கொள்ளப்படும்**

கொழுப்புமிகு ஈரல் நோய் (Metabolic Dysfunction associated Steatotic Liver Disease-Previously NAFLD) அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நோயின் தாக்கம் உள்ளவர்களுக்கு ஆரம்ப நிலையிலேயே நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளித்து நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**100.ஹீமோபிலியா நோயாளிகளுக்கான மாநில அளவிலான இணைய பதிவேடு உருவாக்கப்படும்**

மாநிலத்திலுள்ள ஹீமோபிலியா நோயாளிகளின் முக்கியத் தரவுகளை ஒருங்கிணைந்த முறையில் பராமரிக்க மாநில ஹீமோபிலியா பதிவேடு உருவாக்கப்படும்.

இதன்மூலம் ஹீமோபிலியா நோயாளிகள் இருப்பிடத்தரவுகள், சிகிச்சை முறைகள், ஆரோக்கிய நிலை, மருந்துகள் கையிருப்பு ஆகியவற்றை அறிந்து, நோயாளிகளுக்கு சிறப்பான சேவை வழங்கப்படும்.

**101.தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தான இணைய முகமை உருவாக்கப்படும்**

தமிழ்நாட்டில் உடல் உறுப்பு நன்கொடையாளர் மற்றும் பெறுநர் ஆகியோரின் விண்ணப்பம் பெறுதல், விண்ணப்பங்களை செயலாக்குதல், ஆவண பதிவேற்றங்கள் மற்றும் அதன் முடிவுகளை அறிய நிகழ்நிலை இணைய முகமை உருவாக்கப்படும். இவ்விணைய முகமை ஒருங்கிணைக்கப்பட்ட, பாதுகாப்பான ஒரு களஞ்சியப் பதிவேடாக அமையும்.

**102. நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், ஒருங்கிணைந்த சுகாதாரநிபுணத்துவப் பயிற்சி மையங்கள் (IHPTC) நிறுவப்படும்**

தூத்துக்குடி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஒருங்கிணைந்த சுகாதார நிபுணத்துவப் பயிற்சி மையங்கள் (The Integrated Health Professional Training Centre) ஏற்படுத்தப்படும். இது மருத்துவக் கல்விப் பிரிவுடன் இணைக்கப்பட்ட ஒரு அலகாக (unit) உருவாக்கப்படும்.

### இதயத்தைக் காக்கும் இ.சி.ஜி. (ECG) கருவிகள்

**103.பத்து அரசு மருத்துவமனைகளுக்கு இ.சி.ஜி. (ECG) கருவிகள் வழங்கப்படும்**

மதுராந்தகம், சிதம்பரம், அரூர், கொடைக்கானல், சத்தியமங்கலம், பூதப்பாண்டி, தேன்கனிக்கோட்டை, சங்கரன்கோவில், கோத்தகிரி, சிவகாசி ஆகிய 10 அரசு மருத்துவமனைகளுக்கு ECG கருவிகள் வழங்கப்படும்.

### "நடப்போம் நலம் பெறுவோம்" திட்டம்

**104. "நடப்போம் நலம் பெறுவோம்" திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக நடைப்பயிற்சித் தடங்கள் ஏற்படுத்தப்படும்**

தொற்றா நோய்களைத் தவிர்க்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் "நடப்போம் நலம் பெறுவோம்" திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக நடைப்பயிற்சித் தடங்கள் ஏற்படுத்தப்படும்.

### மருத்துவ இயக்ககத்தின் வைர விழா

**105. மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் வைர விழா கொண்டாடப்படும்**

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 60 ஆண்டுகள் பெரும் தொண்டாற்றி வருகிறது. இவ்வியக்ககம் 60 ஆண்டு காலம் நிறைவு செய்வதையொட்டி வைர விழா கொண்டாடப்படும்.

**106.தமிழ்நாடு நுண்ணுயிர் எதிர்ப்பு மற்றும் மேற்பார்வை வழிகாட்டு நெறிமுறைகள் விரிவாக்கம் செய்யப்படும்**

தமிழ்நாடு நுண்ணுயிர் எதிர்ப்பு மற்றும் மேற்பார்வை வழிகாட்டு நெறிமுறைகள், நோயாளிகள் விரைவாக குணமாவதற்கும், பொது சுகாதார தாக்கத்தையும், பொருளாதார தாக்கத்தையும் கட்டுக்குள் கொண்டு வருவதற்கும் வழிவகைச் செய்யும். இது மாநிலத்தின் ஒருமித்த சுகாதார முன்முயற்சியின் ஒரு பகுதியாகும்.

### புதிய நிருவாகக் கட்டடம்

**107.ஒருங்கிணைந்த அடுக்குமாடி புதிய நிருவாகக் கட்டடம் அமைக்கப்படும்**

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரக வளாகத்தில் ஒருங்கிணைந்த புதிய அடுக்குமாடி நிருவாகக் கட்டடம் அமைக்கப்படும்.

**108. ஐநூறு நகர்ப்புற சுகாதார மற்றும் நல வாழ்வு மையங்களுக்கு தடுப்பூசி சேவைகள் விரிவாக்கம் செய்யப்படும்**

அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 'தடுப்பூசி திட்டத்தின்' கீழ் ஒவ்வொரு புதன்கிழமையும் வழங்கப்படும் வெளிப்புற கள தடுப்பூசி சேவைகள் (outreach session), தற்போது செயல்பாட்டில் உள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களிலும் மேலும் தொடங்கப்பட உள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும்.

**109.தற்போது 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தப்படும்**

ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி அளிக்கப்படுவதன்மூலம் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் வராமல் தடுக்க முடியும். ஏற்கனவே, 15 மாவட்டங்களில் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி, குழந்தைகளுக்கு தடுப்பூசி திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மேலும் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, தென்காசி, சென்னை (ஏற்கனவே செயல்படுத்தப்படும் 2 மண்டலங்கள் தவிர்த்து அனைத்து மண்டலங்கள்) ஆகிய 5 மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தப்படும்.

### சேலத்தில் நான்காம் பொது சுகாதார மாநாடு

**110.நான்காவது பொது சுகாதார சர்வதேச மாநாடு (DPHICON) நடத்தப்படும்**

நான்காவது சர்வதேச பொது சுகாதார மாநாடு இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சேலம் மாநகரில் நடத்திட ஏற்பாடு செய்யப்படும்.

111.சிறு வணிக நிறுவனத் தொழிலாளர்களைத் தேடி 'பணியிடம் சார்ந்த தொற்றா நோய்களுக்கான' பரிசோதனைகள் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின்கீழ் விரிவாக்கம் செய்யப்படும்

'பணியிடம் சார்ந்த தொற்றா நோய் பரிசோதனைத் திட்டத்தின்' கீழ், சிறு வணிக நிறுவனங்கள்/அலுவலகங்களில் உள்ள ஊழியர்களுக்கான தொற்றா நோய் பரிசோதனைகள் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின்கீழ் விரிவுபடுத்தப்படும்.

எப்படி மக்களைத் தேடி மருத்துவம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவம் இருக்கிறதோ அதே போல, சிறு வணிக நிறுவன தொழிலாளர்களைத் தேடியும் மருத்துவத் திட்டம் விரைவில் தொடங்கப் படவிருக்கிறது.

## முழுமையான பல் பரிசோதனைப் பிரிவு!

**112. நான்கு மண்டல மருத்துவக் கல்வி தொழில்நுட்பக் கருத்தரங்குகள் நடத்தப்படும்**

மருத்துவக் கல்வி தொழில்நுட்பக் கருத்தரங்குகள் (MET Conference), மருத்துவக் கல்வி முறையில் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பைப் பற்றி விவாதிக்கவும், காட்சிப்படுத்தவும் மற்றும் ஆராயவும் ஒரு தளமாக செயல்படுகிறது.

இதன்மூலம் உலகத்தரம் வாய்ந்த, நவீனத் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கற்றல் அனுபவம், நம் அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படும்.

**113.உணவுப் பொருட்களில் செயற்கை வண்ணங்களை தவிர்ப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்**

உணவுப் பொருட்களில் அனுமதிக்கப்படாத செயற்கை உணவு வண்ணங்களைச் சேர்க்கக் கூடாது என்பது குறித்து உணவு வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**114.தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கட்டணமின்றி எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்புப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மற்றும் 18 தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தற்போது கட்டணமில்லா வகையில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை வசதிகள் வழங்கப்படுகின்றன. இது போன்று தமிழ்நாட்டில் உள்ள ஏனைய அனைத்து தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கட்டணமின்றி எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்புப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**115.ஐம்பது கல்லூரிகளில் புதிய செஞ்சுருள் சங்கங்கள் (Red Ribbon Clubs), தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் ஏற்படுத்தப்படும்**

**தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் 2,329 கல்லூரிகளில் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், தொழிற்கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் செஞ்சுருள் சங்கங்கள் (Red Ribbon Clubs) ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.**

இதனை விரிவுபடுத்தும் நோக்கில், கல்லூரி மாணவ மாணவிகளிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த மேலும் 50 கல்லூரிகளில் புதிய செஞ்சுருள் சங்கங்கள் (Red Ribbon Clubs), தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் ஏற்படுத்தப்படும்.

**116.வாழ்வியல் திறன் கல்விப் பயிற்சி வாயிலாக பள்ளியில் பயிலும் வளரிளம் பருவத்தினரிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு மேலும் 100 பள்ளிகளில் பயிற்சி அளிக்கப்படும்**

வளரிளம் பருவ மாணவ மாணவிகளிடையே வாழ்வியல் திறன் கல்விப் பயிற்சி வாயிலாக எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு தொடர்பான தகவல்களை தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் வழங்கி வருகின்றது.

இதனை விரிவுபடுத்தும் நோக்கில், மேலும் 100 பள்ளிகளில் பொது சுகாதாரத் துறை மற்றும் தேசிய வளரிளம் பருவத்தினர் நலத் திட்டத்துடன் (RKSK) இணைந்து வாழ்வியல் திறன் கல்விப் பயிற்சி வாயிலாக எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு தொடர்பான தகவல்கள் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**117.தமிழ்நாட்டில் போதைத் தரக்கூடிய மருந்துகளின் நடமாட்டத்தை கண்காணிக்க பறக்கும் படைகள் உருவாக்கப்படும்**

போதைப் பழக்கத்தை உண்டாக்கும் மருந்துகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகவும், போதை தரக்கூடிய மருந்துகளின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காகவும் தமிழ்நாடு முழுவதும் மருந்து ஆய்வாளர்களைக் கொண்ட பறக்கும் படைகள் உருவாக்கப்படும்.

**118.தரச் சான்றிதழ்களின் அடிப்படையில், உணவு வணிகர்களைத் தேர்வு செய்வது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்**

உணவின் தரம் மற்றும் பாதுகாப்பு நிறைந்த உணவகத்திற்கான சுகாதார மதிப்பீடு சான்றிதழ் (Hygiene Rating), உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் மற்றும் FoSTaC பயிற்சி சான்றிதழ் பெற்ற உணவு வணிகர்களைத் தேர்வு செய்வதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் முதல் 1 ஆண்டிலேயே கலைஞர் உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்றை கட்டி, ஏறத்தாழ 450 கோடி ரூபாய் செலவிலான அந்த மருத்துவமனை தமிழகத்தின் அடையாளமாகவே இன்றைக்கு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இப்படி உயர் சிறப்பு மருத்துவமனைகளாக இருந்தாலும், மாவட்ட அரசு மருத்துவமனைகளாக இருந்தாலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் என்று மருத்துவக் கட்டமைப்பை மிகப் பெரிய அளவில் உயர்த்தி இருக்கிற மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டின் மக்களின் சார்பில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாவகையிலும் இதற்கு உதவியாக இருந்துகொண்டிருக்கிற அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய மகிழ்ச்சி நிறைந்த நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

துறையில், ஏறத்தாழ 1 இலட்சம் மருத்துவர்கள், செவிலியர்கள் பணியாளர்கள் என்று மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே ஒவ்வொருவருமே நன்றிக்குரியவர்கள். 1 இலட்சம் பேருமே தன்னலமற்று சேவையாற்றிக் கொண்டிருப்பவர்கள். இதில் ஒரு 10 பெயர்களைச் சொன்னால் அத்தனைப் பெயர்களையுமே சொன்னதாக அர்த்தம். எனவே, அந்தவகையில் தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் இந்தத் துறையின் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார் அவர்களுக்கும், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக ஆணையரகத்தின் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் உணவு பாதுகாப்பு ஆணையர் ஆர். லால்வேனா, அவர்களுக்கும், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநரகத்தின் ஆணையர் திருமதி.எம்.விஜயலட்சுமி, அவர்களுக்கும், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மா.அரவிந்த், அவர்களுக்கும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் திருமதி பி. உமாமகேஷ்வரி, அவர்களுக்கும், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி ஆர்.சீதாலட்சுமி, அவர்களுக்கும், தமிழ்நாடு தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் இயக்குநர் டாக்டர் அ.அருண்தம்புராஜ், அவர்களுக்கும், தமிழ்நாடு சுகதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் சு.வினீத், அவர்களுக்கும், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு. எஸ்.செல்வவிநாயகம் அவர்களுக்கும், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகத்தின் இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் துறை இயக்குநர் மரு. ஜெ. ராஜமூர்த்தி அவர்களுக்கும், குடும்ப நலத் துறையின் இயக்குநர், இ.எஸ்.ஐ இயக்குநர் இப்படி அனைத்துத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் மகிழ்ச்சி நிறைந்த நன்றியினை இந்த அவையின் சார்பில் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலுரையில் அறிவிப்புகளை வெளியிட்டார்.